# RRB NTPC Undergraduate 2025

## Undergraduate Level · CEN 07/2025 · CBT-2 · Question Paper

**Tamil**

Complete Paper · 120 Questions · Official Answer Key

## About this Compilation

This booklet contains the complete question paper of the **RRB NTPC Undergraduate 2025 CBT-2** examination in **Tamil**, with the correct option marked as per the official answer key.

✓ Correct option (highlighted green)

### How to use

- Use the **Index** page to jump directly to any set (clickable).
- Questions appear section by section in the order of the paper, numbered 1 onward.
- Diagram and wide-table questions appear at full width at the end of their section.
- The correct answer is highlighted in green with a tick.

### More from QMaths

Check your marks, normalized score and zone-wise rank free at **rank.qmaths.in**. Master English vocabulary with the **Blackbook** app.




*Toppers' Choice, Blackbook of English Vocabulary, Now available in App format : DOWNLOAD NOW*

# Index — All Sets (click to open)

Set 1 17 Sep 2026
9:30 AM - 11:00 AM

**Q1** General Awareness

கேலப் (Gallup) மற்றும் ஐ.நா.வின் நிலையான மேம்பாட்டுத் தீர்வுகளுக்கான நெட்வொர்க் (UN SDSN) ஆகியவற்றுடன் இணைந்து, 'உலக மகிழ்ச்சி அறிக்கை 2026' (World Happiness Report 2026)-ஐ எந்த அமைப்பு வெளியிட்டது?

- **A.** வெல்பீயிங் ரிசர்ச் சென்டர், ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் (Wellbeing Research Centre, University of Oxford) ✓
- **B.** உலக பொருளாதார மன்றம்
- **C.** பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பு (Organisation for Economic Co-operation and Development)
- **D.** உலக வங்கி

**Q2** General Awareness

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி புள்ளிவிவரங்கள் 2026-இன்படி, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி நிறுவப்பட்ட திறனில் இந்தியாவின் உலகளாவிய தரவரிசை என்ன?

- **A.** ஐந்தாவது
- **B.** மூன்றாவது ✓
- **C.** இரண்டாவது
- **D.** நான்காவது

**Q3** General Awareness

தெற்கு, தென்கிழக்கு மற்றும் கிழக்கு ஆசியாவின் பருவமழை பகுதிகளில் நடைமுறையில் உள்ள தீவிர தற்சார்பு வேளாண்மையின் சிறப்பியல்புகளை பின்வருவனவற்றில் எது சரியாக அடையாளம் காட்டுகிறது?

- **A.** கடின உழைப்பு மற்றும் பல பயிர் சாகுபடி கொண்ட சிறு பண்ணைகள் ✓
- **B.** இடம்பெயர்வு விவசாயம் மற்றும் நீண்ட தரிசு நிலங்களைக் கொண்ட ஆங்காங்கேயுள்ள பண்ணைகள்
- **C.** ஏற்றுமதி பயிர்கள் மற்றும் கூலி தொழிலாளர்களைக் கொண்ட பரந்த தோட்டங்கள்
- **D.** விரிவான மேய்ச்சல் மற்றும் இயந்திரமயமாக்கல் கொண்ட பெரிய பண்ணைகள்

**Q4** General Awareness

2024–25 இல், கல்வி அமைச்சகம் ஏற்கனவே அமலில் உள்ள தேசிய திட்டத்தின் மூலம், பள்ளி கல்வியில் சைபர் பாதுகாப்பு மற்றும் டிஜிட்டல் நலனை ஒருங்கிணைப்பதை மீண்டும் உறுதிப்படுத்தியது. எந்தத் திட்டத்தின் கீழ், சைபர் பாதுகாப்பு உள்ளிட்ட விஷயங்கள் குறித்து கட்டமைக்கப்பட்ட வாராந்திர அமர்வுகளை நடத்துவதற்காக, தலா ஒவ்வொரு பள்ளியிலிருந்தும் இரண்டு ஆசிரியர்கள் சுகாதார மற்றும் நல்வாழ்வுத் தூதுவர்களாகப் பயிற்சி அளிக்கப்படுகிறார்கள்?

- **A.** CBSE சைபர் பாதுகாப்பு கையேடு
- **B.** பாதுகாப்பான ஆன்லைன் கற்றல் பற்றிய NCERT கையேடு
- **C.** பள்ளி சுகாதாரம் & ஆரோக்கிய திட்டம் (SHWP) ✓
- **D.** டிஜிட்டல் கல்விக்கான PRAGYATA வழிகாட்டுதல்கள்

**Q5** General Awareness

பின்வரும் மூலப்பொருட்களின் ஜோடியில் எது, இந்தியாவில் இரும்பு மற்றும் எஃகு உற்பத்திக்கு மிகவும் அத்தியாவசியமானதாகும்?

- **A.** செப்பு தாது மற்றும் ஜிப்சம்
- **B.** இரும்புத் தாது மற்றும் மாங்கனீசு
- **C.** பாக்சைட் மற்றும் ஜிப்சம்
- **D.** இரும்புத் தாது மற்றும் நிலக்கரி ✓

**Q6** General Awareness

இந்தியாவின் சுதந்திரப் போராட்ட அரசியலில், தீவிரவாதம் எழுச்சி பெறுவதற்கு உடனடி உத்வேகத்தை அளித்த நிகழ்வு எது?

- **A.** வங்காளப் பிரிவினை ✓
- **B.** மார்லி–மிண்டோ சீர்திருத்தங்கள்
- **C.** இல்பர்ட் பில் சர்ச்சை
- **D.** முதல் உலகப் போர்

Blackbook Vocabulary — Now in the App! ► Download Now on Google Play

**Q7** General Awareness

பின்வருவனவற்றில் எது, UPSC தலைவர் அல்லது அதன் உறுப்பினரைப் பதவியிலிருந்து நீக்குவதற்கான ஒரு காரணம் அல்ல?

A. வெளிநாட்டு விருதை ஏற்றுக்கொள்வது ✓

B. அதிகாரப்பூர்வ கடமைகளுக்கு வெளியே ஊதியம் பெறும் வேலை

C. மனம் அல்லது உடல் நலிவு

D. திவால் நிலை (Insolvency)

**Q8** General Awareness

பின்வருவனவற்றுள் எது, ஷெர் ஷா சூரியின் ஆட்சியில் உருவாக்கப்பட்ட சாலைக் கட்டமைப்பின் நிர்வாக முக்கியத்துவத்தை மிகச் சிறப்பாக விளக்குகிறது?

A. கோஸ் மினார்கள் (Kos minars) தூதுவர்களுக்குத் தங்குமிட வசதியை அளித்து, வருவாய் அலுவலகங்களாகச் செயல்பட்டன.

B. தபால் சாவடிகள் தானியங்களைச் சேமித்து வைத்து, சந்தை மையங்களாகச் செயல்பட்டன.

C. சராய்கள் வரிகளை வசூலித்து, இராணுவப் பாசறைகளாகச் செயல்பட்டன.

D. சராய்கள் தங்குமிடத்தை வழங்கின மற்றும் தபால் சாவடிகளாகச் (dak chowkis) செயல்பட்டன ✓

**Q9** General Awareness

இந்தியாவில் நகராட்சிகளுக்கு, அரசியலமைப்பு அந்தஸ்தை வழங்கிய அரசியலமைப்புத் திருத்தச்சட்டம் எது?

A. 61வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம், 1989

B. 74வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம், 1992 ✓

C. 73வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம், 1992

D. 86வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம், 2002

**Q10** General Awareness

எந்த வேதகால அவையானது, முக்கியமாக முதியோர்கள், அறிஞர்கள் மற்றும் உயர்குடியினரைக் கொண்டதாக இருந்தது?

A. சபை (Sabha) ✓

B. விதாத்தா(Vidatha)

C. சமிதி (Samiti)

D. கணா (Gana)

**Q11** General Awareness

மக்களவை மற்றும் மாநில சட்டமன்ற தேர்தல்களுக்கான வாக்களிக்கும் வயதைக் குறைத்த இந்திய அரசியலமைப்புச் சட்டத்திருத்தம் எது?

A. 44 வது அரசியலமைப்பு திருத்தச் சட்டம்

B. 61 வது அரசியலமைப்புச் திருத்தச் சட்டம் ✓

C. 74 வது அரசியலமைப்புச் திருத்தச் சட்டம்

D. 52 வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம்

**Q12** General Awareness

ICC சாம்பியன்ஸ் ட்ராஃபி கிரிக்கெட் போட்டித் தொடரானது, எந்த காலமுறை சுழற்சியில் நடத்தப்படுகிறது?

A. ஒவ்வொரு 2 ஆண்டுகளுக்கும் ஒரு முறை

B. ஒவ்வொரு 4 ஆண்டுகளுக்கும் ஒரு முறை ✓

C. ஒவ்வொரு 6 ஆண்டுகளுக்கும் ஒரு முறை

D. ஒவ்வொரு 5 ஆண்டுகளுக்கும் ஒரு முறை

Blackbook Vocabulary — Now in the App! ▶ Download Now on Google Play

generated by rank.qmaths.in

**Q13** General Awareness

இந்தியாவின் தேசிய பன்முக ஏழ்மைக் குறியீட்டிற்கு (Multidimensional Poverty Index) (MPI) ஆல்கியர்-பாஸ்டர் வழிமுறையின் (Alkire-Foster methodology) இரட்டை வரம்பு அணுகுமுறை (dual-cutoff approach) ஏன் தேர்ந்தெடுக்கப்பட்டது?

A. இது அனைத்துக் குறிகாட்டிகளுக்கும் ஒரே ஒரு பொதுவான பற்றாக்குறை வரம்பைப் (common deprivation threshold) பயன்படுத்துகிறது

B. இது பன்முக ஏழ்மையின் ஊரகப் பரிமாணங்களை மட்டுமே வலியுறுத்துகிறது

C. இது உலகளாவிய ஒப்பீட்டுத் தன்மையுடன் இந்தியாவின் வளர்ச்சி முன்னுரிமைகளை ஒருங்கிணைக்கிறது ✓

D. இது குடும்பங்களின் வருமானம் சார்ந்த பற்றாக்குறைகளை மட்டுமே அளவிடுகிறது

**Q14** General Awareness

சிந்து சமவெளி நாகரிகத்தின் திட்டமிடப்பட்ட நகர்ப்புற அமைப்பை, பின்வரும் எந்த அம்சம் சிறப்பாக விளக்குகிறது?

A. வட்ட வடிவ மையங்களைச் சுற்றி அமைக்கப்பட்ட குடியிருப்புகள்

B. பெரிய கோவில் வளாகங்களைச் சுற்றி நெருக்கமாக அமைக்கப்பட்டுள்ள கட்டிட அமைப்புகள்

C. ஒழுங்கற்ற வளைந்த பாதைகளினிடையே கட்டப்பட்ட வீடுகள்

D. தெருக்கள் ஒன்றையொன்று செங்கோணத்தில் வெட்டிக்கொள்வது ✓

**Q15** General Awareness

ஒரு நிறுவனம், ஒரே அலுவலகக் கட்டிடத்திற்குள், தனியாக நிர்வகிக்கப்படும் ஒரு நெட்வொர்க் மூலம் ஃபைல்கள், பிரிண்டர்கள் மற்றும் பிற மூலவளங்களைப் பகிர்ந்துகொள்வதற்காக, அந்த அலுவலகக் கட்டிடத்திற்குள் உள்ள கணினிகளை இணைக்கிறது. இந்த அமைப்புக்கு எந்த வகையான நெட்வொர்க் மிகவும் பொருத்தமானதாகும்?

A. லோக்கல் ஏரியா நெட்வொர்க் (LAN) ✓

B. பெர்சனல் ஏரியா நெட்வொர்க் (PAN)

C. மெட்ரோபாலிட்டன் ஏரியா நெட்வொர்க் (MAN)

D. வைட் ஏரியா நெட்வொர்க் (WAN)

**Q16** General Awareness

2026 இல், இந்திய அரசாங்கத்தால் தொடங்கப்பட்ட சமக்ர ஷிஷூ பால் ஸ்வாஸ்த்ய கார்யக்ரம் (Samagra Shishu Bal Swasthya Karyakram) (SSBSK)-இன் முதன்மை நோக்கம் என்ன?

A. வளர் இளம்பருவத்தினருக்கு ஊட்டச்சத்து வழங்கல்

B. குழந்தைகளுக்கு இலவச கல்வி வழங்குதல்

C. பிறப்பு முதல் 36 மாதங்கள் வரையிலான குழந்தைகளுக்கு, ஒருங்கிணைந்த குழந்தை சுகாதார சேவையை வழங்குதல் ✓

D. மகப்பேறு சுகாதார மானியங்களை வழங்குதல்

**Q17** General Awareness

நவம்பர் 2025 இல், புதிய தொழிலாளர் சட்டத் தொகுப்புகள் (Labour Codes) நடைமுறைப்படுத்தப்பட்ட போது, பெண்களின் பாதுகாப்பு தொடர்பாக எந்த குறிப்பிடத்தக்க மாற்றத்தை அவை கொண்டு வந்தன?

A. மகப்பேறு நன்மைகளிலிருந்து விலக்கு அளிக்கப்பட்ட பெண்கள்

B. முன்கூட்டியே ஓய்வு பெற வேண்டிய கட்டாயத்திலுள்ள பெண்கள்

C. தொழிலக வேலைவாய்ப்புகளில் அனுமதிக்கப்படாத பெண்கள்

D. பாதுகாப்பு வழிமுறைகளுடன் கூடிய இரவுப் பணி அனுமதி ✓

**Q18** General Awareness

எந்த ஐரோப்பிய வர்த்தக நிறுவனம், வணிக ஆதிக்கத்தை, குறிப்பாக நறுமணப் பொருட்கள் வர்த்தகத்தை முதன்மை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டது மற்றும் மலபார் பகுதியில் மிக முக்கிய வணிகத்தளங்களைக் கொண்டிருந்தது?

A. பிரெஞ்சு கிழக்கிந்திய கம்பெனி

B. ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி

C. டச்சு கிழக்கிந்திய கம்பெனி ✓

D. டேனிஷ் கிழக்கிந்திய கம்பெனி

Blackbook Vocabulary — Now in the App! ► Download Now on Google Play

**Q19** General Awareness

வீட்டு மின்சாதனங்கள், தொடரிணைப்பிற்குப் பதிலாக பக்கஇணைப்பில் இணைக்கப்படுவது ஏன் என்பதை பின்வரும் எந்தக் கூற்று சிறப்பாக விளக்குகிறது?

- A. பக்க இணைப்பு சுற்றுகள் ஒவ்வொரு சாதனத்தின் மின்தடையையும் அதிகரிக்கின்றன.
- B. ஒரு நேரத்தில் ஒரு சாதனத்தின் வழியாக மட்டுமே மின்னோட்டம் பாய்கிறது.
- C. ஒவ்வொரு சாதனமும் முழுமையான சப்ளை மின்னழுத்தத்தைப் பெற்று, தனித்தனியாக இயங்குகிறது. ✓
- D. பக்க இணைப்பு சுற்றுகள் சப்ளை மின்னழுத்தத்தைக் குறைக்கின்றன.

**Q20** General Awareness

இந்தியாவின் மேற்குக் கடற்கரைச் சமவெளிகள், பரந்த டெல்டாக்களுக்குப் பதிலாக, ஏராளமான முகத்துவாரங்களைக் (estuaries) கொண்டிருப்பதற்கான காரணத்தை பின்வருவனவற்றில் எது சிறப்பாக விளக்குகிறது?

- A. ஆறுகள் ஏராளமான வண்டல் படிவுகளைக் கொண்டு செல்கின்றன
- B. ஆறுகள் நீளமானவை, மெதுவாகப் பாய்பவை, மற்றும் வளைந்து நெளிந்து செல்பவை
- C. ஆறுகள் பரந்த வெள்ளச் சமவெளிகளில் பாய்கின்றன
- D. ஆறுகள் குறுகியதாகவும், செங்குத்தானதாகவும் மற்றும் அதிவேகமாகப் பாயக்கூடியதாகவும் உள்ளன ✓

**Q21** General Awareness

ஜார்க்கண்ட் மாநிலத்தின் சிங்பூம் மாவட்டத்தில் உள்ள குவா மற்றும் நோவாமுண்டி ஆகிய இடங்களில், முக்கியமாக எந்தக் கனிமம் வெட்டி எடுக்கப்படுகிறது?

- A. மாங்கனீசு தாது
- B. பாக்சைட் தாது
- C. மைக்கா தாது
- D. ஹேமடைட் இரும்புத் தாது ✓

**Q22** General Awareness

மத்திய-மாநில உறவுகள் தொடர்பான சிக்கல்களை ஆராய்வதற்காக, 1983-ஆம் ஆண்டில் மத்திய அரசால் நியமிக்கப்பட்ட, மற்றும் ஆளுநர் நியமனமானது கண்டிப்பாகக் கட்சிச் சார்பற்றதாக இருக்க வேண்டும் என்று பரிந்துரைத்த ஆணையம் எது?

- A. மண்டல் கமிஷன்
- B. ராஜமன்னார் கமிஷன்
- C. சர்க்காரியா கமிஷன் ✓
- D. கோத்தாரி கமிஷன்

**Q23** General Awareness

ஹைட்ரஜனும் ஆக்சிஜனும் இணைந்து நீரை உருவாக்குகின்றன. நீரில், ஹைட்ரஜனும் ஆக்சிஜனும் எப்போதும் ஒரு குறிப்பிட்ட நிறை விகிதத்தில் உள்ளன என்று கூறும் விதி எது?

- A. பாயில் விதி (Boyle's Law)
- B. மாறா விகித விதி ✓
- C. அவகாட்ரோ விதி (Avogadro's Law)
- D. பெருக்கல் விகித விதி

**Q24** General Awareness

விம்பிள்டன் டென்னிஸ் போட்டியின் பெண்கள் ஒற்றையர் பிரிவு வெற்றியாளருக்கு வழங்கப்படும் கோப்பை எது?

- A. ஆஷஸ் டிராபி
- B. டேவிஸ் கப்
- C. வீனஸ் ரோஸ்வாட்டர் டிஷ் ✓
- D. ரைடர் கப்

**Q25** General Awareness

1855–56-இல் சித்து மற்றும் கன்ஹு ஆகியோரின் தலைமையில் நடந்த பழங்குடியினர் கிளர்ச்சி எது?

- A. பில் கிளர்ச்சி
- B. ராமோசி கிளர்ச்சி (Ramosi Revolt)
- C. கோல் கிளர்ச்சி
- D. சாந்தால் கிளர்ச்சி (Santhal Rebellion) ✓

Blackbook Vocabulary — Now in the App! ► Download Now on Google Play

generated by rank.qmaths.in

**Q26** General Awareness

இந்தியாவில் உணவுச் சங்கிலியின் உச்சத்திலுள்ள ஒரு வேட்டையாடும் விலங்கைப் (apex predator) பாதுகாப்பதற்காக, 1973-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட வனவிலங்கு பாதுகாப்பு முன்முயற்சித் திட்டம் எது?

A. சிறுத்தைகள் பாதுகாப்புத் திட்டம்

B. யானைகள் பாதுகாப்புத் திட்டம்

C. புலிகள் பாதுகாப்புத் திட்டம் ✓

D. முதலைகள் பாதுகாப்புத் திட்டம்

**Q27** General Awareness

பட்டியலின பழங்குடியினரின் சமூக-பொருளாதார வளர்ச்சிக்கான ஒரு உத்தியாக வகுக்கப்பட்ட பழங்குடியினர் துணைத் திட்டம் (TSP), முக்கியமாகப் பின்வரும் நோக்கங்களில் எதை அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது?

A. அறிவிக்கப்பட்ட பழங்குடியின பகுதிகளில் தொழில்துறை வளர்ச்சியை மேம்படுத்துதல் மற்றும் போக்குவரத்து உள்கட்டமைப்பை விரிவுபடுத்துதல்

B. அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியின் மூலம், பட்டியல் பழங்குடியினருக்கும் மற்ற மக்களுக்கும் இடையிலான வளர்ச்சிக்கான இடைவெளியைக் குறைத்தல் ✓

C. அடையாளம் காணப்பட்ட பழங்குடியின குடியிருப்புகளில் நகர்ப்புற உள்கட்டமைப்பை வலுப்படுத்துதல் மற்றும் நகராட்சி சேவைகளை விரிவுபடுத்துதல் மற்றும் பழங்குடியின பகுதிகளில் வணிக நடவடிக்கைகளை மேம்படுத்துதல்

D. பழங்குடியினர் ஆதிக்கம் செலுத்தும் பகுதிகளில் தனியார் முதலீட்டை ஊக்குவித்தல் மற்றும் வணிக நடவடிக்கைகளை மேம்படுத்துதல்

**Q28** General Awareness

ஒரு செஸ்போர்டில் உள்ள எட்டு கட்டங்களின் நெடுவரிசைகள் 'ஃபைல்கள்' (files) என்று அழைக்கப்படுகின்றன; எனில், அதிலுள்ள எட்டு கட்டங்களின் கிடைவரிசைகள், _______ என்றழைக்கப்படுகின்றன.

A. காஸ்லிங்குகள் (Castlings)

B. கிளாக்குகள் (Clocks)

C. டயகனல்கள் (Diagonals)

D. ரேங்க்குகள் (Ranks) ✓

**Q29** General Awareness

சங்க இலக்கியத்தில், பின்வருவனவற்றுள் எந்தக் கருப்பொருள், முதன்மையாக 'புறம்' என்ற கருத்தாக்கத்துடன் தொடர்புடையது?

A. அன்பு(காதல்) மற்றும் தனிப்பட்ட உணர்வுகள்

B. மதச் சடங்குகளும் பலி கொடுத்தலும்

C. வர்த்தகமும் வணிகமும்

D. போர், வீரம் மற்றும் பொது வாழ்க்கை ✓

**Q30** General Awareness

இந்திய அரசியலமைப்பின் எந்த சட்டப்பிரிவு, ஒரு நபர் ஒரே குற்றசெயலுக்குகாக ஒரு முறைக்கு மேல் தண்டிக்கப்படுவதிலிருந்து பாதுகாக்கிறது?

A. சட்டப்பிரிவு 20 ✓

B. சட்டப்பிரிவு 19

C. சட்டப்பிரிவு 21

D. சட்டப்பிரிவு 18

**Q31** General Awareness

குடியுரிமைச் சட்டம், 1955-இன்படி, ஒரு நபரின் இந்தியக் குடியுரிமையை ரத்து செய்யவோ அல்லது பறிக்கவோ அதிகாரம் கொண்ட அமைப்பு எது?

A. நாடாளுமன்றம்

B. இந்திய உச்ச நீதிமன்றம்

C. உள்துறை அமைச்சகம் (மத்திய அரசு) ✓

D. இந்தியக் குடியரசுத் தலைவர் மற்றும் அமைச்சரவைக் குழு

Blackbook Vocabulary — Now in the App! ▶ Download Now on Google Play

**Q32** General Awareness

கோசி ஆறானது, இமயமலையிலிருந்து பாயும் ஒரு வற்றாத ஆறாக இருந்தபோதிலும், பீகார் சமவெளிகளில் அது அடிக்கடி தனது பாதையை மாற்றிக்கொள்வதற்கான காரணத்தை, பின்வருவனவற்றுள் எது மிகச் சிறப்பாக விளக்குகிறது?

A. இது கடினமான பாறைகளின் வழியே பாய்வதால், மண் அரிப்பைக் குறைக்கிறது

B. இது மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியிலிருந்து உருவாகிறது

C. இதன் வடிநிலப் பகுதியில் குறைந்த அளவே மழையைப் பெறுகிறது

D. இது கனமான படிவுகளைப் படியவைத்து, தன் நீரோட்டப் பாதையைத் தடைசெய்கிறது ✓

**Q33** General Awareness

பண்டைய இந்தியக் கட்டிடக்கலையில், ஹரப்பா நகரங்களின் திட்டமிடலை மிகச் சிறப்பாகக் குறிக்கும் அம்சம் எது?

A. மதரீதியான கூட்டங்களுக்கான குவிமாடம் கொண்ட ஸ்தூபிகள் (domed stupas)

B. நேர்த்தியான செதுக்கு வேலைப்பாடுகள் கொண்ட பெரிய கோயில் வளாகங்கள்

C. வழிபாட்டிற்கான பிரம்மாண்டமான குடைவரைக் கோயில்கள்

D. கட்டம் (Grid) போன்ற தெரு அமைப்பு மற்றும் நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட திட்டமிடப்பட்ட வடிகால் வசதி ✓

**Q34** General Awareness

2026-இல், அன்டோனியோ குட்டெரஸுக்குப் (António Guterres) பிறகு, 10-வது பொதுச்செயலாளரைத் தேர்ந்தெடுக்கும் செயல்முறையை, எந்த சர்வதேச அமைப்பு தொடங்கியது?

A. சர்வதேச நீதிமன்றம்

B. ஐக்கிய நாடுகள் சபை ✓

C. உலக பொருளாதார மன்றம்

D. காமன்வெல்த் செயலகம்

**Q35** General Awareness

பின்வரும் எந்த சுருக்கப்பெயரானது, கணினிகளில் பயன்படுத்தப்படும் கேரக்டர் குறியாக்கத்தின் (character encoding) ஒரு தரநிலையைக் குறிக்கிறது?

A. LAN

B. RAM

C. ASCII ✓

D. CD

**Q36** General Awareness

செனாப் பாலமானது, எந்த வகையில் ரயில்வே உள்கட்டமைப்பில் ஒரு உலகளாவிய மைல்கல்லை ஏற்படுத்தியுள்ளது?

A. உலகின் மிக நீளமான எஃகு வளைவுத் தூரத்தைக்(longest steel span) கொண்ட இரயில்வே வளைவுப் பாலம் என்ற சிறப்பைப் பெறுவதன் மூலம்

B. உலகின் மிக உயரமான இரயில்வே வளைவுப் பாலம் (railway arch bridge ) என்ற சிறப்பைப் பெறுவதன் மூலம் ✓

C. ஆசியாவின் மிக நீளமான ரயில் வளைவுப் பாலமாக உருவானதன் மூலம்

D. மலைப்பள்ளத்தாக்கின் குறுக்கே கட்டப்பட்ட மிக நீளமான இரயில்வே பாலம் என்ற சிறப்பைப் பெறுவதன் மூலம்

**Q37** General Awareness

இந்தியாவில் மனநலப் பராமரிப்பை வலுப்படுத்துவதற்காக, 2026–27 ஆம் ஆண்டுக்கான மத்திய பட்ஜெட்-ஆனது, எந்தப் புதிய நிறுவனத்தை நிறுவ முன்மொழிந்தது?

A. AIIMS-2

B. NIMHANS-2 ✓

C. NITI ஆயோக் சுகாதார மையம்

D. நேஷனல் ட்ராமா இன்ஸ்டிடியூட்

Blackbook Vocabulary — Now in the App! ▶ Download Now on Google Play

generated by rank.qmaths.in

**Q38** General Awareness

பின்வருவனவற்றில் எது, 2015 இல் தொடங்கப்பட்ட பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா – அர்பன் (PMAY-U) திட்டத்தின் முதன்மை நோக்கம் ஆகும்?

A. தகுதியுள்ள நகர்ப்புறக் குடும்பங்களுக்கு தற்காலிக தங்குமிடங்களை வழங்குதல்

B. தகுதியுள்ள நகர்ப்புறக் குடும்பங்களுக்கு மலிவு விலையில் வாடகை வீடுகளை வழங்குதல்

C. தகுதியுள்ள நகர்ப்புறக் குடும்பங்களுக்கு அடிப்படை வசதிகளுடன் கூடிய குடியிருப்பு மனைகளை வழங்குதல்

D. தகுதியுள்ள நகர்ப்புறக் குடும்பங்களுக்கு பக்கா வீடுகளை வழங்குதல் ✓

**Q39** General Awareness

Ctrl + C மூலம் ஒரு ஸ்பிரெட் ஷீட் (spreadsheet) செல்-ஐ காப்பி செய்து, Ctrl + V மூலம் பல லொக்கேஷன்-களில் பேஸ்டு செய்த பிறகு, அதன் விளைவை பின்வரும் எந்தக் கூற்று மிகச் சரியாக விவரிக்கிறது?

A. பேஸ்ட் செய்யப்பட்ட ஒவ்வொரு மதிப்பும் தானாகவே ஒரு சூத்திரக் குறிப்பாக மாற்றப்படுகிறது

B. ஒவ்வொரு டெஸ்டினேஷன் செல்லும் (destination cell) அசல் உள்ளடக்கத்தின் ஒரே மாதிரியான காப்பியைப் பெறுகிறது ✓

C. ஒவ்வொரு வெற்றிகரமான பேஸ்ட் செயல்பாட்டிற்குப் பிறகும் அசல் செல் அழிக்கப்படுகிறது

D. அனைத்து டெஸ்டினேஷன் செல்களும், அசல் உள்ளடக்கத்துடன் மாறும் தன்மையுடன் (dynamically) இணைக்கப்பட்டுள்ளன

**Q40** General Awareness

ஜூன் 2026 ஆம் ஆண்டில், DRDO-ஆனது, NASM-MR என்ற ஏவுகணையின் முதல் விமானப் பரிசோதனையை (flight test) மேற்கொண்டது. இந்த ஏவுகணையானது எந்த நோக்கத்திற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது?

A. குறுகிய வரம்பில், தரையிலிருந்து வான்வழி இடைமறித்துத் தாக்குதல்

B. நடுத்தர வரம்பில், ஆன்டி-டாங்க் வழிகாட்டப்பட்ட தாக்குதல்

C. ஆன்டி-டாங்க் வழிகாட்டப்பட்ட தாக்குதல்

D. நடுத்தர வரம்பில், கப்பல்களைத் தாக்கி அழிக்கும் திறன் ✓

**Q41** General Awareness

2026 இல் நடைபெற்ற தர்மா கார்டியன் கூட்டு ராணுவப் பயிற்சியின் 7வது பதிப்பில் பங்கேற்ற இரண்டு நாடுகள் எவை?

A. ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலியா

B. இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா

C. இந்தியா மற்றும் ஜப்பான் ✓

D. இந்தியா மற்றும் பிரான்சு

**Q42** General Awareness

ஒரு நோயாளிக்கு சிறுநீரகத்தின் வடிகட்டும் அலகுகளின் செயல்பாடு பாதிக்கப்பட்டுள்ளது. எனில், எந்த உடலியல் செயல்முறையானது மிகவும் நேரடியாகப் பாதிக்கப்படும்?

A. வியர்வை உற்பத்தி மூலம் உடல் வெப்பநிலையை பராமரித்தல்

B. இரத்தத்திலிருந்து நைட்ரஜன் கழிவுகளை அகற்றுதல் ✓

C. உடற்பயிற்சியின் போது சுவாச விகிதத்தை ஒழுங்குபடுத்துதல்

D. சிவப்பு இரத்த அணுக்கள் மூலம் ஆக்ஸிஜனை கடத்துதல்

**Q43** General Awareness

புது தில்லியில் நடைபெற்ற டிஜிட்டல் செய்தி வெளியீட்டாளர்கள் சங்கத்தின் (DNPA) 2026 மாநாட்டின் முக்கிய நோக்கம் என்ன?

A. மாநில அரசின் புதிய ஊடகக் கொள்கையை அறிவித்தல்

B. விளையாட்டு ஒளிபரப்பு உரிமைகள் பேச்சுவார்த்தைகளை ஊக்குவித்தல்

C. அச்சுப் புத்தகப் பதிப்புத் துறையின் சமீபத்திய புதுப்பிப்பு தகவல்களில் கவனம் செலுத்துதல்

D. கலந்துரையாடல் மற்றும் ஒத்துழைப்பிற்காக டிஜிட்டல் செய்தி நிறுவனங்களை ஒன்றிணைத்தல் ✓

Blackbook Vocabulary — Now in the App! ▶ Download Now on Google Play

**Q44** General Awareness

தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005-இன் கீழ், விலக்குகள் தொடர்பாக அடிக்கடி விவாதிக்கப்படும் சட்டம் எது?

A. இந்திய சாட்சியச் சட்டம், 1872 (Indian Evidence Act, 1872)

B. மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், 1951 (Representation of the People Act, 1951)

C. போட்டிச் சட்டம், 2002 (Competition Act, 2002)

D. அதிகாரப்பூர்வ ரகசியங்கள் சட்டம், 1923 (Official Secrets Act, 1923) ✓

**Q45** General Awareness

பாதுகாப்பு, ரயில்வே மற்றும் வருமான வரி போன்ற துறைகள், இந்திய அரசியலமைப்பின் எந்த பட்டியலின் கீழ் இடம்பெற்றுள்ளன?

A. ஒருங்கியல் பட்டியல்

B. ஒன்றியத்துப் பட்டியல் ✓

C. எஞ்சிய பட்டியல்

D. மாநிலத்துப் பட்டியல்

**Q46** General Awareness

சமையல் செய்யும் போது, சமையல் சோடாவானது, எலுமிச்சை சாறு அல்லது வினிகருடன் வினைபுரியும் போது, எந்த வாயு வெளியிடப்படுகிறது?

A. ஹைட்ரஜன்

B. நைட்ரஜன்

C. கார்பன் டை ஆக்சைடு ✓

D. ஆக்ஸிஜன்

**Q47** General Awareness

பிப்ரவரி 27, 2026 அன்று, தேசிய புள்ளியியல் அலுவலகம் (NSO)-ஆனது, மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) மதிப்பீடுகளின் ஒரு புதிய வரிசையை வெளியிட்டது; இதில் அடிப்படை ஆண்டை, 2011-12-இலிருந்து எந்தப் புதிய அடிப்படை ஆண்டுக்கு மாற்றப்பட்டது?

A. 2020-21

B. 2015-16

C. 2022-23 ✓

D. 2018-19

**Q48** General Awareness

டெல்லி (குடிமக்களுக்கு காலவரையறைக்குள் சேவைகளை வழங்கும் உரிமைச் சட்டம்) மசோதா, 2026-ஆனது, இதற்கு முந்தைய எந்தச் சட்டத்திற்குப் பதிலாகக் கொண்டுவரப்பட்டதாகும்?

A. டெல்லி குடிமக்களுக்கு காலவரையறைக்குள் சேவைகளை வழங்கும் உரிமைச் சட்டம், 2019

B. டெல்லி குடிமக்களுக்கு காலவரையறைக்குள் சேவைகளை வழங்கும் உரிமைச் சட்டம், 2011 ✓

C. டெல்லி குடிமக்களுக்கு காலவரையறைக்குள் சேவைகளை வழங்கும் உரிமைச் சட்டம், 2006

D. டெல்லி குடிமக்களுக்கு காலவரையறைக்குள் சேவைகளை வழங்கும் உரிமைச் சட்டம், 2001

**Q49** General Awareness

அரசியலமைப்புத் திருத்தங்கள் குறித்த 'அடிப்படை அமைப்புவடிவக் கோட்பாட்டை' (Basic Structure Doctrine) உச்ச நீதிமன்றம் எந்த வரலாற்றுச் சிறப்புமிக்க வழக்கில் முன்மொழிந்தது?

A. கேசவானந்த பாரதி v. கேரள மாநிலம் ✓

B. இந்திரா காந்தி v. ராஜ் நாராயண்

C. கோலக்நாத் v. பஞ்சாப் மாநிலம்

D. மினர்வா மில்ஸ் v. இந்திய ஒன்றியம்

**Q50** General Awareness

ஏப்ரல் 8–23 வரை 2026 இல் நடைபெற்ற UNESCO நிர்வாகக் குழுவின் 224வது கூட்டத்தொடர் ______________ இல் நடைபெற்றது.

A. பிரஸ்ஸல்ஸ், பெல்ஜியம்

B. மாட்ரிட், ஸ்பெயின்

C. ரோம், இத்தாலி

D. பாரிஸ், பிரான்ஸ் ✓

Blackbook Vocabulary — Now in the App! ▶ Download Now on Google Play

generated by rank.qmaths.in

**Q51** Mathematics

23 cm அடிப்பக்க நீளமும், 12 cm ஒத்த உயரமும் கொண்ட ஒரு முக்கோணத்தின் பரப்பளவைப் போல, இரு மடங்கு பரப்பளவைக் கொண்ட ஒரு சதுரத்தின் பரப்பளவைக் கண்டறியவும்.

A. 218 $cm^2$

B. 256 $cm^2$

C. 204 $cm^2$

D. 276 $cm^2$ ✓

**Q52** Mathematics

ஒரு நீர்த்தேக்கத் தொட்டியானது 15 m நீளமும் மற்றும் 12 m அகலமும் கொண்ட ஒரு கனசெவ்வக வடிவத்தில் உள்ளது. இத்தொட்டியின் தரை மற்றும் சீலிங்-கின் பரப்பளவுகளின் கூட்டுத்தொகையானது, அதன் நான்கு சுவர்களின் பரப்பளவிற்குச் சமமாக உள்ளது. எனில், இத்தொட்டியில் எத்தனை லிட்டர் மழைநீரைச் சேமிக்க முடியும்?

A. $1000 \times 10^2$ லிட்டர்

B. $1200 \times 10^2$ லிட்டர்

C. $1200 \times 10^3$ லிட்டர் ✓

D. 1200 லிட்டர்

**Q53** Mathematics

ஒரு மாணவனின் மதிப்பெண்ணானது 59 என்பதற்குப் பதிலாகத் தவறாக 68 எனப் பதிவு செய்யப்பட்டன. இதன் காரணமாக, வகுப்பின் சராசரி மதிப்பெண்கள் 1.8 அதிகரித்தது எனில், அந்த வகுப்பில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

A. 5 ✓

B. 7

C. 6

D. 4

**Q54** Mathematics

AB மற்றும் CD ஆகியவை இணைகோடுகள் ஆகும். இதில், குறுக்குவெட்டியான XY க்கு இடதுபுறத்தில் A மற்றும் C யும் மற்றும் வலதுபுறத்தில் B மற்றும் D உம் அமைந்துள்ளன. இக்குறுக்குவெட்டியானது AB ஐ M என்ற புள்ளியிலும் மற்றும் CD ஐ N என்ற புள்ளியிலும் வெட்டுகிறது. இங்கு X, M, N மற்றும் Y ஆகிய புள்ளிகள் அதே வரிசையில் ஒரே நேர்க்கோட்டில் அமைந்துள்ளன. $\angle XMA$ இன் அளவு 125° எனில், $\angle CNY$ இன் அளவு ________ ஆகும்.

A. 55° ✓

B. 58°

C. 50°

D. 52°

**Q55** Mathematics

A, B மற்றும் C ஆகிய மூவரும் இணைந்து, ஒரு குறிப்பிட்ட வேலையை 37 நாட்களில் முடிக்க முடியும். B மற்றும் C ஆகியோர் இணைந்து அதே வேலையை 74 நாட்களில் முடிக்க முடியும். B என்பவர் A ஐ விட 50% அதிக திறன் கொண்டவர் ஆவார். A, B மற்றும் C ஆகிய மூவரும் 28 நாட்கள் ஒன்றாக வேலை செய்கிறார்கள். மீதமுள்ள வேலையை, B மட்டும் தனியாக எத்தனை நாட்களில் முடிப்பார்?

A. 12 நாட்கள் ✓

B. 13 நாட்கள்

C. 14 நாட்கள்

D. 9 நாட்கள்

**Q56** Mathematics

ஒரு வியாபாரி ஒரே மாதிரியான 20 பொருட்களை ₹400-க்கு வாங்குகிறார். 25 சதவீதம் லாபம் பெற வேண்டுமெனில், அனைத்து பொருட்களின் விற்பனை விலையும் ஒரே மாதிரியாக இருப்பின், அவர் ₹400-க்கு எத்தனை பொருட்களை விற்க வேண்டும்?

A. 15

B. 16 ✓

C. 20

D. 18

Blackbook Vocabulary — Now in the App! ▸ Download Now on Google Play

**Q57** Mathematics

மதிப்பிடுக: (−37) + (−56) ÷ (−3) × 3

A. 21

B. 17

C. 19 ✓

D. 15

**Q58** Mathematics

2025 m நீளமுள்ள ஒரு வட்டப் பாதையிலான ஓட்டப்பந்தயத்தில், குஷால் மற்றும் யாமினி ஆகிய இருவரும் ஒரே புள்ளியிலிருந்து, ஒரே நேரத்தில் முறையே 33 km/h மற்றும் 36 km/h ஆகிய வேகங்களில் புறப்படுகிறார்கள். அவர்கள் இருவரும் ஒரே திசையில் ஓடினால், எவ்வளவு நேரத்துக்கு பிறகு அந்தப் பாதையில் அவர்கள் மீண்டும் முதன்முறையாகச் சந்திப்பார்கள்?

A. 2438 வினாடிகள்

B. 2430 வினாடிகள் ✓

C. 2426 வினாடிகள்

D. 2434 வினாடிகள்

**Q59** Mathematics

ஒரு தரவின் சராசரி 41 மற்றும் அதன் இடைநிலை 50 ஆகும். எனில், அத்தரவின் முகடு (அனுபவ சூத்திரத்தின் தொடர்பைப் பயன்படுத்தி) ________ ஆகும்.

A. 150

B. 68 ✓

C. 91

D. 156

**Q60** Mathematics

ஒரு நோட்டுப்புத்தகக் கடையானது நோட்டுப்புத்தகங்களையும் மற்றும் பேனாக்களையும் விற்கின்றன. 5 நோட்டுப்புத்தகங்கள் மற்றும் 3 பேனாக்களின் மொத்த விலை ₹146 ஆகும். அதே சமயம், 7 நோட்டுப்புத்தகங்கள் மற்றும் 2 பேனாக்களின் மொத்த விலை ₹178 ஆகும். எனில், ஒரு மாணவர் 4 நோட்டுப்புத்தகங்கள் மற்றும் 6 பேனாக்களை வாங்கினால், அவர் செலுத்த வேண்டிய தொகை எவ்வளவு?

A. ₹176

B. ₹160 ✓

C. ₹168

D. ₹154

**Q61** Mathematics

மூன்று எண்களின் சராசரி 15 ஆகவும், இரண்டு எண்கள் 10 மற்றும் 20 ஆகவும் இருக்கிறது எனில், மூன்றாவது எண் என்ன?

A. 10

B. 25

C. 20

D. 15 ✓

**Q62** Mathematics

ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து 1.45 km தூரத்தில் துப்பாக்கியால் சுடப்படுகிறது.அந்த ஒலி 5 வினாடிகளுக்குப் பிறகு கேட்கிறது. எனில், ஒலி எந்த (m/s) வேகத்தில் பயணிக்கிறது?

A. 145 m/s

B. 240 m/s

C. 300 m/s

D. 290 m/s ✓

Blackbook Vocabulary — Now in the App! ► Download Now on Google Play

**Q63** Mathematics

ஒரு வேலையை, A மற்றும் B ஆகிய இருவரும் இணைந்து 24 நாட்களில் முடிக்க முடியும். A மட்டும் தனியாக அந்த வேலையை 60 நாட்களில் முடிக்க முடியுமெனில், B மட்டும் தனியாக அதே வேலையின் நான்கில் ஒரு பங்கை எத்தனை நாட்களில் முடிக்க முடியும்?

- A. 10 ✓
- B. 8
- C. 12
- D. 9

**Q64** Mathematics

ஒரு கடைக்காரர் தனது பொருட்களை 5% நட்டத்திற்கு விற்பதாகக் கூறுகிறார்; ஆனால் ஒரு பழுதான தராசைப் பயன்படுத்தி 40% லாபம் ஈட்டுகிறார். எனில், அவர் 1 kgக்குப் பதிலாகப் பயன்படுத்தும் உண்மையான எடை (ஒரு தசம இடத்திற்கு முழுமையாக்கவும்) எவ்வளவு?

- A. 675.3 gm
- B. 678.6 gm ✓
- C. 682.8 gm
- D. 680.9 gm

**Q65** Mathematics

ஒரு கடைக்காரர் தனது அடக்கவிலையின் மீது 40% லாபத்தை எதிர்பார்க்கிறார். ஒரு வாரத்தில், அவரது விற்பனைத் தொகை ₹3,955 ஆக இருந்தால், அவரது லாபம் (₹ இல்) என்ன?

- A. 1,133
- B. 1,129
- C. 1,130 ✓
- D. 1,132

**Q66** Mathematics

மதிப்பிடுக: 11 − 12 ÷ 12 × 8

- A. 3 ✓
- B. 1
- C. 2
- D. 4

**Q67** Mathematics

A-இன் 25% ஆனது, B-இன் 40%-க்குச் சமம்; மற்றும் B-இன் 30% ஆனது C-யின் 45%-க்குச் சமம் எனில், A:B:C ஆனது ________ஆகும்.

- A. 8:5:3
- B. 24:15:10 ✓
- C. 12:9:7
- D. 24:14:9

**Q68** Mathematics

ஒரு குறிப்பிட்ட தனிவட்டி விகிதத்தில், ₹620 என்ற தொகையானது, 2 ஆண்டுகளில் ₹910 என அதிகரிக்கிறது. எனில், அந்த 2 ஆண்டுகளுக்கான வட்டித் தொகையைக் (₹-இல்) காண்க.

- A. 285
- B. 290 ✓
- C. 300
- D. 305

**Q69** Mathematics

6:7, 11:12, 21:23, 31:35, 43:45 என்ற விகிதங்களை ஏறுவரிசையில் வரிசைப்படுத்துக.

- A. 6:7, 31:35, 11:12, 43:45, 21:23
- B. 6:7, 31:35, 21:23, 11:12, 43:45 ✓
- C. 6:7, 11:12, 21:23, 31:35, 43:45
- D. 6:7, 31:35, 11:12, 21:23, 43:45

**Q70** Mathematics

கிருஷ் என்பவரிடம் ₹1,352 என்ற தொகை உள்ளது; அதை அவர் தனது இரு மகன்களான வீர் மற்றும் நிதின் ஆகியோருக்குப் பிரித்துக் கொடுக்கிறார். இருவரும் தத்தமது தொகையை ஆண்டுக்கு 8% வீத வருடாந்திர கூட்டுவட்டி முறையில் முதலீடு செய்கிறார்கள். 18 ஆண்டுகளுக்குப் பிறகு வீர் சேர்த்த தொகையும் மற்றும் 19 ஆண்டுகளுக்குப் பிறகு நிதின் சேர்த்த தொகையும் சமமாக இருந்தால், கிருஷ், நிதினுக்கு கொடுத்த பணம் (₹ இல்) எவ்வளவு?

- A. 500
- B. 802
- C. 702
- D. 650 ✓

Blackbook Vocabulary — Now in the App! ▶ Download Now on Google Play

**Q71** Mathematics

ஒரு வேலையை 15 நாட்களில் முடிக்க, 24 தொழிலாளர்களைக் கொண்ட ஒரு குழு நியமிக்கப்படுகிறது. 1 நாள் வேலை செய்த பிறகு, 8 தொழிலாளர்கள் வேலையிலிருந்து விலகுகின்றனர். அனைத்து தொழிலாளர்களும் சம வேலைத்திறன் கொண்டவர்கள் எனக் கொண்டால், மீதி வேலையை முடிப்பதற்கு, எஞ்சிய தொழிலாளர்களுக்கு கூடுதலாக இன்னும் எத்தனை நாட்கள் தேவைப்படும்?

- A. 18 நாட்கள்
- B. 28 நாட்கள்
- C. 21 நாட்கள் ✓
- D. 25 நாட்கள்

**Q72** Mathematics

ஒரு வகுத்தல் கணக்கில், வகுத்தியானது ஈவைப் போல் 3 மடங்காகவும் மற்றும் மீதியைப் போல் 8 மடங்காகவும் உள்ளது. மீதி என்பது 12 எனில், வகுபடும் எண் என்ன?

- A. 3048
- B. 3084 ✓
- C. 3066
- D. 3072

**Q73** Mathematics

ஒரு மிதிவண்டி வீரர், முதல் 30 km தொலைவை 20 km/h வேகத்திலும், அடுத்த 50 km தொலைவை 25 km/h வேகத்திலும் மற்றும் இறுதி 20 km தொலைவை 10 km/h வேகத்திலும் கடக்கிறார். இந்த முழுமையான 100 km பயணத்திற்கான அந்த மிதிவண்டி வீரரின் சராசரி வேகம் என்ன (அருகிலுள்ள முழு எண்ணிற்கு முழுமையாக்கவும்)?

- A. 20 km/h
- B. 21 km/h
- C. 19 km/h
- D. 18 km/h ✓

**Q74** Mathematics

A, B மற்றும் C ஆகிய மூவருக்கும் ஒரு குறிப்பிட்ட தொகை பகிர்ந்தளிக்கப்படுகிறது. A என்பவருக்கு B இன் பங்கைப் போல் இரண்டு மடங்கும், மற்றும் B க்கு, C இன் பங்கைப் போல் மூன்று மடங்கும் உள்ளவாறு அளிக்கப்படுகிறது. மொத்தத் தொகை ₹720 எனில், C பெறும் தொகை எவ்வளவு?

- A. ₹72 ✓
- B. ₹60
- C. ₹96
- D. ₹84

**Q75** Mathematics

5 தொழிலாளர்கள் நாளொன்றுக்கு 8 மணி நேரம் வேலை செய்து 12 நாட்களில் 2400 அலகுகளை உற்பத்தி செய்கிறார்கள் எனில் ஒவ்வொரு தொழிலாளரின் உற்பத்தித் திறனும் மாறாமல் இருக்கும் எனக் கருதினால் 10 தொழிலாளர்கள் நாளொன்றுக்கு 8 மணி நேரம் வேலை செய்து 12 நாட்களில் எத்தனை அலகுகளை உற்பத்தி செய்வர்?

- A. 4800 அலகுகள் ✓
- B. 3600 அலகுகள்
- C. 6000 அலகுகள்
- D. 2400 அலகுகள்

**Q76** Mathematics

மோகன் மற்றும் டேவிட் ஆகிய இரு நண்பர்களின் மாத வருமானம் முறையே 6 : 8 என்ற விகிதத்தில் உள்ளது. மேலும், அவர்கள் ஒவ்வொருவரும், ஒவ்வொரு மாதமும் ₹51,000 சேமிக்கிறார்கள். அவர்களின் மாதச் செலவின் விகிதம் 2 : 4 எனில், மோகனின் மாத வருமானத்தைக் கண்டறியவும் (₹ இல்).

- A. 76,500 ✓
- B. 1,07,100
- C. 77,500
- D. 75,500

Blackbook Vocabulary — Now in the App! ▶ Download Now on Google Play

**Q77** Mathematics

3, 77 மற்றும் 33 ஆகிய எண்களின் மீ.பொ.ம (LCM) ________ ஆகும்.

A. 231 ✓

B. 462

C. 77

D. 242

**Q78** Mathematics

ஒரு மடிக்கணினியின் விலை ₹45,000 என விலை குறிக்கப்பட்டுள்ளது. ஒரு கடைக்காரர் குறிக்கப்பட்ட விலையில் 25% தள்ளுபடி வழங்குகிறார். தள்ளுபடிக்குப் பிறகு, மடிக்கணினி விற்பனை விலையில் கூடுதலாக 10% வரியுடன் விற்கப்படுகிறது. தள்ளுபடி மற்றும் வரிக்குப் பிறகு, அந்த மடிக்கணினியின் இறுதி விலை என்ன?

A. ₹34,650

B. ₹37,500

C. ₹37,125 ✓

D. ₹33,750

**Q79** Mathematics

ஒரு எண்ணின் 7% என்பது, அதே எண்ணின் 9% இல் எத்தனை சதவீதமாகும்? (இரண்டு தசம இடங்களுக்கு முழுமையாக்கவும்.)

A. 78.57%

B. 43.75%

C. 77.78% ✓

D. 21.87%

**Q80** Mathematics

54 cm × 44 cm × 30 cm பரிமாணங்களைக் கொண்ட ஒரு திண்ம ஈய கனசெவ்வகத்திலிருந்து, 3 cm ஆரம் கொண்ட எத்தனை கோள வடிவ ஈயக் குண்டுகளை உருவாக்க முடியும்?
( $\pi = \frac{22}{7}$ எனக் கொள்ளவும்)

A. 620

B. 640

C. 600

D. 630 ✓

Blackbook Vocabulary — Now in the App! ▶ Download Now on Google Play

**Q81** Mathematics

$5 \sin y + \cos y = \sqrt{13} \sin y$ எனில், $\tan y$ இன் மதிப்பைக் கண்டறியவும்.

A. $\frac{-6 - \sqrt{13}}{12}$

B. $\frac{-5 - \sqrt{13}}{22}$

C. $\frac{-5 - \sqrt{13}}{17}$

D. $\frac{-5 - \sqrt{13}}{12}$ ✓

**Q82** Mathematics

7.065 $m^3$ என்ற கனஅளவைக் கொண்ட ஒரு அரைக்கோளக் கிண்ணத்தின் மொத்தப் புறப்பரப்பளவைக் காண்க. ( $\pi = 3.14$ எனக் கொள்ளவும்)

A. 18.125 $m^2$

B. 21.195 $m^2$ ✓

C. 28.365 $m^2$

D. 35.125 $m^2$

**Q83** Mathematics

$2^{0.5}$, $2^{1.5}$ மற்றும் $2^{2.5}$ ஆகியவற்றின் நான்காம் விகிதசமனைக் கண்டறியவும்.

A. $2^{0.5}$

B. $2^4$

C. $2^{3.5}$ ✓

D. $2^2$

**Q84** Mathematics

4, 8, 6, 5, 3, 9 ஆகிய தரவுத் தொகுப்பை கவனித்து, விலக்க வர்க்க சராசரியை (variance) காண்க.

A. $\frac{151}{35}$

B. $\frac{161}{36}$ ✓

C. $\frac{161}{35}$

D. $\frac{151}{36}$

Blackbook Vocabulary — Now in the App! ► Download Now on Google Play

**Q85** Mathematics

$5^8 \times 6^7 \times 11^4$ என்ற எண்ணின் பகாக் காரணிகளின் மொத்த எண்ணிக்கையைக் கண்டறியவும்.

A. 26 ✓

B. 30

C. 28

D. 22

## General Intelligence & Reasoning

35 Questions • Answer Key

**Q86** General Intelligence & Reasoning

பின்வரும் எண், சின்னங்களின் தொடரைப் பார்த்து, கேள்விக்கு பதிலளிக்கவும். (இடமிருந்து வலமாக மட்டுமே எண்ணப்பட வேண்டும். அனைத்து எண்களும் ஓரிலக்க எண்கள் மட்டுமே.).
(இடது) ? / & @ 9 # @ % * / \ $ % * < & 5 5 2 > 3 (வலது)
தனக்கு உடனடி முன்பாக ஒரு சின்னத்தையும், மற்றும் தனக்கு உடனடி பின்பாகவும் ஒரு சின்னத்தையும் கொண்டுள்ளவாறு எத்தனை எண்கள் உள்ளன?

A. எதுவும் இல்லை

B. இரண்டு

C. ஒன்று ✓

D. மூன்று

**Q87** General Intelligence & Reasoning

ஆங்கில அகரவரிசையின் அடிப்படையில் அமைந்த பின்வரும் நான்கு எழுத்து-தொகுப்பு ஜோடிகளில், மூன்று மட்டும் ஒரு குறிப்பிட்ட வழிமுறையில் ஒரே மாதிரியாக உள்ளன. இதனால் அவை ஒரு குழுவை உருவாக்குகின்றன. எனில், அக்குழுவில் சேராத எழுத்துத் தொகுப்பு ஜோடி எது?
(குறிப்பு: மாறுபட்ட ஒன்றானது, எழுத்து-தொகுப்பில் உள்ள மெய்யெழுத்துக்கள்/ உயிரெழுத்துகளின் எண்ணிக்கை அல்லது அவற்றின் நிலை ஆகியவற்றின் அடிப்படையில் இல்லை.)

A. JK – IJ

B. GJ – FI

C. CA – BZ

D. KD – HB ✓

**Q88** General Intelligence & Reasoning

A × Y என்றால் “A என்பவர் Y இன் தாய்”.
A – Y என்றால் “A என்பவர் Y இன் மகள்”.
A $ Y என்றால் “A என்பவர் Y இன் தந்தை”.
A @ Y என்றால் “A என்பவர் Y இன் கணவர்”.

'B @ Z – E $ Q' எனில், B என்பவர் Qக்கு என்ன உறவு?

A. சகோதரரின் மனைவி

B. தந்தையின் சகோதரி

C. மகனின் மனைவி

D. சகோதரியின் கணவர் ✓

**Q89** General Intelligence & Reasoning

'A' என்பது '÷' ஐக் குறிக்கிறது, 'B' என்பது '×' ஐக் குறிக்கிறது, 'C' என்பது '+' ஐக் குறிக்கிறது, மற்றும் 'D' என்பது '–' ஐக் குறிக்கிறது. எனில், பின்வரும் சமன்பாட்டில் கேள்விக்குறிக்கு (?) பதிலாக என்ன வரும்?
67 C 3 B 19 C (84 A 2) D 6 = ?

A. 173

B. 154

C. 172

D. 160 ✓

Blackbook Vocabulary — Now in the App! ► Download Now on Google Play

**Q90** General Intelligence & Reasoning

கொடுக்கப்பட்ட தொடரை தர்க்கரீதியாக முழுமையாக்க, பின்வரும் எழுத்து-எண் தொகுப்புகளில் எது, கேள்விக்குறிக்குப் (?) பதிலாக வரும்?

WOG 147, BKB 163, GGW 179, LCR 195, QYM 211, ?

A. WVG 225

B. UTF 227

C. VWG 225

D. VUH 227 ✓

**Q91** General Intelligence & Reasoning

கீழே கொடுக்கப்பட்டுள்ள இரண்டு ஜோடிகள் பின்பற்றும் அதே அமைப்பைப் பின்பற்றும் ஜோடியைத் தேர்ந்தெடுக்கவும். இரண்டு ஜோடிகளும் ஒரே மாதிரியான அமைப்பைப் பின்பற்றுகின்றன.

LIF : HEB

WUH : SQD

A. KOT : GKQ

B. HRP : DOL

C. TQV : PMR ✓

D. JLG : EGC

**Q92** General Intelligence & Reasoning

ஆங்கில அகரவரிசையின் அடிப்படையில் கொடுக்கப்பட்ட தொடரில், கேள்விக்குறிக்கு(?) பதிலாக என்ன வர வேண்டும்?

EKP GMR IOT KQV?

A. MRY

B. MSX ✓

C. MSY

D. MRX

**Q93** General Intelligence & Reasoning

பின்வரும் எழுத்து மற்றும் சின்னத்தின் வரிசையைப் பார்த்து, பின்வரும் கேள்விக்கு பதிலளிக்கவும். இடமிருந்து வலமாக மட்டுமே எண்ணப்பட வேண்டும்

(இடது) M K * J & H ^ G % F $ D # S @ S ! Z + ? N (வலது)

இத்தொடரிலிருந்து அனைத்து எழுத்துக்களும் நீக்கப்பட்டால், பின்வருவனவற்றில் எது, வலமிருந்து ஒன்பதாவது இடத்தில் இருக்கும்?

A. @

B. %

C. #

D. & ✓

Blackbook Vocabulary — Now in the App! ▶ Download Now on Google Play

**Q94** General Intelligence & Reasoning

இந்த கேள்வியில், ஒரு கேள்வியைத் தொடர்ந்து (I) மற்றும் (II) என எண்ணிடப்பட்ட இரண்டு கூற்றுகள் உள்ளன. கேள்விக்குப் பதிலளிக்க கூற்றுகளில் கொடுக்கப்பட்டுள்ள தரவுகள் போதுமானதா என்பதை நீங்கள் தீர்மானிக்க வேண்டும். இரண்டு கூற்றுகளையும் படித்து, பொருத்தமான பதிலைத் தீர்மானிக்கவும்.

கேள்வி:
F, I, S, C மற்றும் L ஆகிய 5 கம்பங்களில், ஒவ்வொன்றும் வெவ்வேறு உயரம் கொண்டவை. எந்த கம்பமானது மிகக் குட்டையானது ஆகும்?

கூற்றுகள்:
(I) S என்பது இரண்டு கம்பங்களை விட மட்டுமே உயரமானது. F என்பது S ஐ விட குட்டையானது; மற்றும் I என்பது F ஐ விட குட்டையானது.
(II) C என்பது L ஐ விட உயரமானது.

A. கூற்று II-இல் உள்ள தரவு மட்டுமே கேள்விக்குப் பதிலளிக்க போதுமானது, அதே நேரத்தில் கூற்று I-இல் உள்ள தரவு பதிலளிக்க போதுமானதல்ல

B. கூற்று I-இல் உள்ள தரவு மட்டுமே கேள்விக்குப் பதிலளிக்க போதுமானது, அதே நேரத்தில் கூற்று II-இல் உள்ள தரவு பதிலளிக்க போதுமானதல்ல ✓

C. கூற்றுகள் I மற்றும் II ஆகிய இரண்டும் ஒன்றாக சேர்ந்தும் கேள்விக்குப் பதிலளிக்க போதுமானவை அல்ல

D. கூற்றுகள் I மற்றும் II ஆகிய இரண்டும் ஒன்றாக சேர்ந்து (கூற்று I மட்டும் அல்லது கூற்று II மட்டும் தனியாக அல்ல) கேள்விக்குப் பதிலளிக்க போதுமானவை

**Q95** General Intelligence & Reasoning

A, B, C, D, E, F மற்றும் G ஆகிய ஏழு நபர்கள் ஒரு வட்ட மேசையைச் சுற்றி மையத்தை நோக்கி அமர்ந்துள்ளனர். G என்பவர் A இன் இடதுபுறத்தில் இரண்டாவதாக அமர்ந்துள்ளார். A என்பவர் F இன் இடதுபுறத்தில் மூன்றாவதாக அமர்ந்துள்ளார். G என்பவர் E இன் உடனடி வலதுபுறத்தில் அமர்ந்துள்ளார். B என்பவர் D இன் உடனடி இடதுபுறத்தில் அமர்ந்துள்ளார். எனில், E ஐப் பொறுத்து F இன் நிலை என்ன?

A. உடனடி இடதுபுறத்தில் ✓

B. இடதுபுறத்திலிருந்து இரண்டாவதாக

C. வலதுபுறத்திலிருந்து இரண்டாவதாக

D. உடனடி வலதுபுறத்தில்

**Q96** General Intelligence & Reasoning

'P' என்பது '×' ஐக் குறிக்கிறது, 'Q' என்பது '÷' ஐக் குறிக்கிறது, 'R' என்பது '−' ஐக் குறிக்கிறது மற்றும் 'S' என்பது '+' ஐக் குறிக்கிறது. எனில், பின்வரும் சமன்பாட்டில் கேள்விக்குறிக்கு (?) பதிலாக என்ன வரும்?
12 P 9 S (98 Q 7) P 3 R 25 = ?

A. 133

B. 142

C. 125 ✓

D. 198

**Q97** General Intelligence & Reasoning

கீழே எண்களின் இரண்டு தொகுப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. எண்களின் ஒவ்வொரு தொகுப்பிலும், முதல் எண்ணில் ஒரு குறிப்பிட்ட கணித செயல்பாடு செய்யப்படுவதன் மூலம் இரண்டாவது எண் ஆனது உருவாகுகிறது. இதேபோல், இரண்டாவது எண்ணில் ஒரு குறிப்பிட்ட கணித செயல்பாடு செய்யப்படுவதன் மூலம் மூன்றாவது எண் ஆனது உருவாகுகிறது மற்றும் இப்படியே தொடர்கிறது. கொடுக்கப்பட்ட விருப்பங்களில் எது, கேள்வியில் உள்ள அதே செயல்பாடுகளின் தொகுப்பைப் பின்பற்றுகிறது? (குறிப்பு: எண்களை அதன் கூறு இலக்கங்களாகப் பிரிக்காமல், முழு எண்களில் செயல்பாடுகள் செய்யப்பட வேண்டும். எ. கா. 13; 13 இல் கூட்டல்/கழித்தல்/பெருக்கல் போன்ற செயல்பாடுகளைச் செய்யலாம். 13 ஐ 1 மற்றும் 3 ஆக பிரித்த பின்னர் 1 மற்றும் 3 இல் கணித செயல்பாடுகளைச் செய்வது அனுமதிக்கப்படாது.)
3 – 9 – 27 – 32 ;
4 – 16 – 48 – 53

A. 7 -49-98-145

B. 8-64-128-150

C. 5 -25-75-80 ✓

D. 6-36-72-80

Blackbook Vocabulary — Now in the App! ▶ Download Now on Google Play

**Q98** General Intelligence & Reasoning

A, B, C, D, E, F மற்றும் G ஆகிய ஏழு பெட்டிகள் ஒன்றன் மேல் ஒன்றாக வைக்கப்பட்டுள்ளன. ஆனால் அதே வரிசையில் இருக்க வேண்டிய அவசியமில்லை. G என்பது அடியிலிருந்து மூன்றாவதாக வைக்கப்படுகிறது. G மற்றும் C க்கு இடையில் இரண்டு பெட்டிகள் மட்டுமே வைக்கப்பட்டுள்ளன. F மட்டுமே B க்கு கீழே வைக்கப்பட்டுள்ளது. E என்பது A க்கு உடனடி கீழே வைக்கப்பட்டுள்ளது. எனில், உச்சியிலிருந்து நான்காவதாக எந்த பெட்டி உள்ளது?

A. A

B. B

C. E ✓

D. F

**Q99** General Intelligence & Reasoning

ஆங்கில அகரவரிசையின் அடிப்படையில், ஒரு குறிப்பிட்ட வழிமுறையில் VZNT என்பது UYMS உடன் தொடர்புடையது. அதே வழிமுறையில், RJKS என்பது QIJR உடன் தொடர்புடையது. அதே தர்க்கத்தைப் பின்பற்றி, AFLM என்பது கொடுக்கப்பட்ட விருப்பங்களில் எதனுடன் தொடர்புடையதாகும்?

A. YDJK

B. BGMN

C. ZEKL ✓

D. ZGML

**Q100** General Intelligence & Reasoning

FANTAIL என்ற வார்த்தையில் உள்ள ஒவ்வொரு உயிரெழுத்தும், ஆங்கில அகர வரிசைப்படி, அதற்கு உடனடி அடுத்து வரும் எழுத்தாக மாற்றப்படுகிறது; மற்றும் ஒவ்வொரு மெய்யெழுத்தும் ஆங்கில அகர வரிசைப்படி, அதற்கு உடனடி முன்பாக வரும் எழுத்தாக மாற்றப்படுகிறது. இவ்வாறு உருவாக்கப்பட்ட எழுத்துக்களின் குழுவில், எத்தனை எழுத்துக்கள் சரியாக இரண்டு முறை தோன்றும்?

A. மூன்று

B. பூஜ்யம்

C. இரண்டு

D. ஒன்று ✓

**Q101** General Intelligence & Reasoning

ஒரு குறிப்பிட்ட குறியீட்டு மொழியில், 'CADS' என்பது '4689' என்றும், 'DASH' என்பது '6985' என்றும் குறியிடப்பட்டுள்ளது. எனில், கொடுக்கப்பட்ட குறியீட்டு மொழியில் 'H' க்கான குறியீடு என்ன?

A. 6

B. 5 ✓

C. 9

D. 8

**Q102** General Intelligence & Reasoning

சுமித் என்பவர், புள்ளி A இலிருந்து தொடங்கி, 28 km கிழக்கு நோக்கி ஓட்டுகிறார். பின்னர் அவர் இடதுபுறம் திரும்பி, 25 km ஓட்டி, இடதுபுறம் திரும்பி, 29 km ஓட்டுகிறார். பின்னர் அவர் ஒரு இடதுபுறம் திரும்பி, 27 km ஓட்டுகிறார். அவர் இறுதியாக இடதுபுறம் திரும்பி, 1 km ஓட்டி, புள்ளி P இல் நிறுத்துகிறார். மீண்டும் புள்ளி A ஐ அடைய, அவர் எவ்வளவு தூரம் (குறுகிய தூரம்) மற்றும் எந்த திசையை நோக்கி ஓட்ட வேண்டும்? (குறிப்பிடப்படாத வரை அனைத்து திருப்பங்களும் 90 டிகிரி திருப்பங்கள் மட்டுமே.)

A. 4 km தெற்கு நோக்கி

B. 3 km கிழக்கு நோக்கி

C. 2 km வடக்கு நோக்கி ✓

D. 1 km மேற்கு நோக்கி

**Q103** General Intelligence & Reasoning

ஒரு குறிப்பிட்ட தர்க்கத்தைப் பின்பற்றி, 6 என்பது 32 உடன் தொடர்புடையது. அதே தர்க்கத்தைப் பின்பற்றி, 2 என்பது 12 உடன் தொடர்புடையது. எனில், அதே தர்க்கத்தைப் பின்பற்றி, 9 என்பது பின்வருவனவற்றில் எதனுடன் தொடர்புடையது ஆகும்?
(குறிப்பு: எண்களை அதன் கூறு (constituent) இலக்கங்களாகப் பிரிக்காமல், முழு எண்களில் செயல்பாடுகள் செய்யப்பட வேண்டும். எ.கா. 13; 13 -இல் கூட்டல் / கழித்தல் / பெருக்கல் போன்ற செயல்பாடுகளைச் செய்யலாம். 13 ஐ 1 மற்றும் 3 ஆக பிரித்த பின்னர் 1 மற்றும் 3 இல் கணித செயல்பாடுகளைச் செய்வது அனுமதிக்கப்படாது)

A. 52

B. 49

C. 45

D. 47 ✓

Blackbook Vocabulary — Now in the App! ▶ Download Now on Google Play

generated by rank.qmaths.in

**Q104** General Intelligence & Reasoning

கொடுக்கப்பட்ட இத்தொடரில், கேள்விக்குறியின் (?) இடத்தில் என்ன வர வேண்டும்?

25 44 39 58 53 ?

A. 82

B. 72 ✓

C. 77

D. 58

**Q105** General Intelligence & Reasoning

லலித் என்பவர் புள்ளி A இல் தொடங்கி, வடக்கு நோக்கி 75 km ஓட்டுகிறார். பின்னர் அவர் இடதுபுறம் திரும்பி, 80 km ஓட்டி, பின் இடதுபுறம் திரும்பி, 85 km ஓட்டுகிறார். பின்னர் அவர் இடதுபுறம் திரும்பி, 89 km ஓட்டுகிறார். அவர் இறுதியாக இடதுபுறம் திரும்பி, 10 km ஓட்டி, புள்ளி P இல் நிறுத்துகிறார். மீண்டும் புள்ளி A ஐ அடைய அவர் எவ்வளவு தூரம் (மிகக்குறுகிய தூரம்) மற்றும் எந்த திசையை நோக்கி ஓட்டிச் செல்ல வேண்டும்? (குறிப்பிடப்படாவிட்டால் அனைத்து திருப்பங்களும் 90° திருப்பங்கள் மட்டுமே.)

A. 8 km மேற்கு நோக்கி

B. 9 km மேற்கு நோக்கி ✓

C. 10 km மேற்கு நோக்கி

D. 11 km கிழக்கு நோக்கி

**Q106** General Intelligence & Reasoning

ஆங்கில அகரவரிசையின் அடிப்படையில் அமைந்த பின்வரும் நான்கு எழுத்து-தொகுப்பு ஜோடிகளில், மூன்று மட்டும் ஒரு குறிப்பிட்ட வழிமுறையில் ஒரே மாதிரியாக உள்ளன. இதனால் அவை ஒரு குழுவை உருவாக்குகின்றன. எனில், அக்குழுவில் சேராத எழுத்துத் தொகுப்பு ஜோடி எது?
(குறிப்பு: மாறுபட்ட ஒன்றானது, எழுத்து-தொகுப்பில் உள்ள மெய்யெழுத்துக்கள்/ உயிரெழுத்துகளின் எண்ணிக்கை அல்லது அவற்றின் நிலை ஆகியவற்றின் அடிப்படையில் இல்லை.)

A. JP - LS

B. SX - UA

C. MI - OL

D. TC - VE ✓

**Q107** General Intelligence & Reasoning

ஒரு குறிப்பிட்ட குறியீட்டு மொழியில், 'AIDS' என்பது '7192' என்றும்,'DASH' என்பது '9215' என்றும் குறியிடப்பட்டுள்ளது. எனில், கொடுக்கப்பட்ட குறியீட்டு மொழியில் 'H' க்கான குறியீடு என்ன?

A. 9

B. 1

C. 2

D. 5 ✓

**Q108** General Intelligence & Reasoning

L, M, N, D, E, F மற்றும் G ஆகிய ஏழு பெட்டிகள் ஒன்றின் மேல் ஒன்றாக வைக்கப்பட்டுள்ளன; ஆனால் இதே வரிசையில் இருக்க வேண்டிய அவசியமில்லை. F-க்கு கீழே இரண்டு பெட்டிகள் மட்டுமே வைக்கப்பட்டுள்ளன. M ஆனது உச்சிமேலிருந்து மூன்றாவதாக வைக்கப்பட்டுள்ளது. D ஆனது L-க்கு உடனடி மேலே வைக்கப்பட்டுள்ளது. E ஆனது N-க்கு கீழே ஏதோ ஒரு இடத்திலும், G-க்கு மேலே ஏதோ ஒரு இடத்திலும் இருக்குமாறு வைக்கப்பட்டுள்ளது. L ஆனது M-க்கு உடனடி மேலே வைக்கப்பட்டுள்ளது. எனில், எந்த பெட்டியானது அடியிலிருந்து இரண்டாவதாக வைக்கப்பட்டுள்ளது?

A. D

B. G

C. N

D. E ✓

**Q109** General Intelligence & Reasoning

ஒரு குறிப்பிட்ட குறியீட்டு மொழியில், 'CROW' என்பது '9863' என்றும் மற்றும் 'WORK' என்பது '3289' என்றும் குறியிடப்பட்டுள்ளது. எனில், கொடுக்கப்பட்ட குறியீட்டு மொழியில் 'K' க்கான குறியீடு என்ன?

A. 8

B. 2 ✓

C. 9

D. 3

Blackbook Vocabulary — Now in the App! ▶ Download Now on Google Play

generated by rank.qmaths.in

**Q110** General Intelligence & Reasoning

ஆங்கில அகரவரிசையின் அடிப்படையில் கொடுக்கப்பட்ட தொடரில், ? க்குப் பதிலாக என்ன வர வேண்டும்?
XGO FOW NWE VEM ?

A. DMY

B. DUM

C. DNI

D. DMU ✓

**Q111** General Intelligence & Reasoning

A, B, C, D, E, F மற்றும் G ஆகிய ஏழு நபர்கள் ஒரு நேர்வரிசையில் வடக்கு நோக்கியவாறு அமர்ந்துள்ளனர். C-க்கு இடதுபுறத்தில் இரண்டு நபர்கள் மட்டுமே அமர்ந்துள்ளனர். F மற்றும் E-க்கு இடையில் நான்கு நபர்கள் மட்டுமே அமர்ந்துள்ளனர். B என்பவர் C-க்கு வலதுபுறத்தில் இரண்டாவதாக அமர்ந்துள்ளார். B ஆனவர் A-இன் ஒரு உடனடி அருகாமையாளர் அல்ல. D என்பவர் C-இன் உடனடி வலதுபுறத்தில் அமர்ந்துள்ளார். F என்பவர் A-இன் உடனடி வலதுபுறத்தில் அமர்ந்துள்ளார். எனில், A மற்றும் D-க்கு இடையில் எத்தனை நபர்கள் அமர்ந்துள்ளனர்?

A. ஒன்று

B. இரண்டு ✓

C. ஒருவருமில்லை

D. மூன்று

**Q112** General Intelligence & Reasoning

கொடுக்கப்பட்ட தொடரில், கேள்விக்குறிக்கு (?) பதிலாக என்ன வர வேண்டும்?

12 13 15 19 27 ?

A. 44

B. 43 ✓

C. 42

D. 45

**Q113** General Intelligence & Reasoning

ஒரு குறிப்பிட்ட குறியீட்டு மொழியில்,

'A + B' என்றால் 'A என்பவர் B இன் தாய்'
'A − B' என்றால் 'A என்பவர் B இன் சகோதரர்'
'A x B' என்றால் 'A என்பவர் B இன் மனைவி'
மற்றும்
'A ÷ B' என்றால் 'A என்பவர் B இன் தந்தை' என கருதப்படுவர்.

'A ÷ B − C x D' எனில், A என்பவர் D க்கு என்ன உறவு?

A. சகோதரர்

B. தாயின் சகோதரர்

C. மனைவியின் தந்தை ✓

D. மனைவியின் தாய்

**Q114** General Intelligence & Reasoning

'I' என்பது '+' ஐக் குறிக்கிறது, 'J' என்பது '×' ஐக் குறிக்கிறது, 'K' என்பது '÷' ஐக் குறிக்கிறது மற்றும் 'L' என்பது '−' ஐக் குறிக்கிறது. எனில், பின்வரும் சமன்பாட்டில் கேள்விக்குறிக்கு '?' பதிலாக என்ன வரும்?
198 L 89 I (72 K 2) L 3 J 4 = ?

A. 130

B. 142

C. 133 ✓

D. 129

Blackbook Vocabulary — Now in the App! ▶ Download Now on Google Play

**Q115** General Intelligence & Reasoning

ஒரு கேள்வியைத் தொடர்ந்து, (I) மற்றும் (II) என எண்ணிடப்பட்ட இரண்டு கூற்றுகள் உள்ளன. கேள்விக்குப் பதிலளிக்க, கூற்றுகளில் வழங்கப்பட்ட தரவு போதுமானதா என்பதை நீங்கள் தீர்மானிக்க வேண்டும். இரண்டு கூற்றுகளையும் படித்து, பொருத்தமான பதிலைத் தேர்தெடுக்கவும்.

கேள்வி: E, J, N, C மற்றும் K ஆகிய 5 குச்சிகள் ஒவ்வொன்றும் வெவ்வேறு உயரத்தைக் கொண்டுள்ளன; இவற்றில் எந்தக் குச்சி உயரம் மிகக் குறைவானது?
கூற்று: (I) K-ஆனது C-யை விட உயரமானது.
கூற்று: (II) E-யை விட, ஒரே ஒரு குச்சி மட்டுமே உயரம் குறைவானது . E-ஆனது C-யை விட உயரம் குறைவானது, ஆனால் J-யை விட உயரமானது.

- **A.** கூற்றுகள் I மற்றும் II ஆகிய இரண்டிலும் உள்ள தரவுகள் ஒன்றாக சேர்ந்து (கூற்று I மட்டும் அல்லது கூற்று II மட்டும் தனியாக அல்ல) கேள்விக்குப் பதிலளிக்க போதுமானவை
- **B.** கூற்று II-இல் உள்ள தரவு மட்டுமே கேள்விக்குப் பதிலளிக்க போதுமானது, அதே நேரத்தில் கூற்று I-இல் உள்ள தரவு பதிலளிக்க போதுமானதல்ல ✓
- **C.** கூற்று I-இல் உள்ள தரவு மட்டுமே கேள்விக்குப் பதிலளிக்க போதுமானது, அதே நேரத்தில் கூற்று II-இல் உள்ள தரவு பதிலளிக்க போதுமானதல்ல
- **D.** கூற்றுகள் I மற்றும் II ஆகிய இரண்டிலும் உள்ள தரவுகள் ஒன்றாக சேர்ந்தும் கேள்விக்குப் பதிலளிக்க போதுமானவை அல்ல

**Q116** General Intelligence & Reasoning

கொடுக்கப்பட்ட இத்தொடரில், கேள்விக்குறியின் (?) இடத்தில் என்ன வர வேண்டும்?

74 75 67 94 30 ?

- **A.** 264
- **B.** 155 ✓
- **C.** 246
- **D.** 165

**Q117** General Intelligence & Reasoning

பின்வரும் எண் மற்றும் சின்னத்தின் தொடரைப் பார்த்து, பின்வரும் கேள்விக்கு பதிலளிக்கவும். இடமிருந்து வலமாக மட்டுமே எண்ணப்பட வேண்டும். அனைத்து எண்களும் ஓரிலக்க எண்கள் ஆகும்.
(இடது) * £ 8 € @ 1 8 8 © & 1 1 1 7 * 4 7 2 8 $ 8 & (வலது)
தனக்கு உடனடி முன்பாக ஒரு எண்ணையும், மற்றும் தனக்கு உடனடி பின்பாகவும் ஒரு எண்ணையும் கொண்டுள்ளவாறு எத்தனை சின்னங்கள் உள்ளன?

- **A.** 2 ✓
- **B.** 3
- **C.** 1
- **D.** 4

**Q118** General Intelligence & Reasoning

IGNITION என்ற வார்த்தையில் உள்ள ஒவ்வொரு உயிரெழுத்தும், ஆங்கில அகர வரிசைப்படி, அதற்கு உடனடி முன்பாக வரும் எழுத்தாக மாற்றப்படுகிறது; மற்றும் ஒவ்வொரு மெய்யெழுத்தும், ஆங்கில அகர வரிசைப்படி, அதற்கு உடனடி அடுத்து வரும் எழுத்தாக மாற்றப்படுகிறது. இவ்வாறு உருவாக்கப்பட்ட எழுத்துக்களின் குழுவில், பின்வரும் எழுத்துக்களில் எது இரண்டு முறைக்கு மேல் தோன்றும்?

- **A.** U
- **B.** H ✓
- **C.** O
- **D.** Z

**Q119** General Intelligence & Reasoning

ஒரு குறிப்பிட்ட குறியீட்டு மொழியில், 'CROW' என்பது '7513' என்றும் 'WORM' என்பது '7613' என்றும் குறியிடப்பட்டுள்ளது. எனில், கொடுக்கப்பட்ட குறியீட்டு மொழியில் 'M' க்கான குறியீடு என்ன?

- **A.** 7
- **B.** 6 ✓
- **C.** 1
- **D.** 3

Blackbook Vocabulary — Now in the App! ▸ Download Now on Google Play

**Q120** General Intelligence & Reasoning

ஒரு குறிப்பிட்ட குறியீட்டு மொழியில், 'PACE' என்பது '8471' என்றும், மற்றும் 'CAMP' என்பது '7412' என்றும் குறியிடப்பட்டுள்ளது. எனில், கொடுக்கப்பட்ட குறியீட்டு மொழியில் 'M' என்பதற்கான குறியீடு என்ன?

A. 1

B. 7

C. 4

D. 2 ✓

Blackbook Vocabulary — Now in the App! ► Download Now on Google Play